முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.

நாள். 05.03.2026.

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், செய்யாறு.**
**அசல் வழக்கு எண். 47/2025**

2026-ம் ஆண்டு மார்ச் மாதம் 05ம் நாள் வியாழக்கிழமை வாதி தரப்பு சாட்சியின் சாட்சியம். உறுதிமொழிச் சட்டம் 1969, பிரிவு 3-ன் படி என்னால் ஆணையிடப்பட்டு, சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | ராமாயி | மாவட்டம் | : | திருவண்ணாமலை |
| க/பெ | : | பொன்னன் | வயது | : | 75 |
| ஊர் | : | பில்லாந்தி | தொழில் | : | இல்லத்தரசி |

**வா.சா. 1 (ராமாயி): பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எனக்கு வழக்கு சொத்தின் சர்வே எண் தெரியாது என்றால் சரிதான். நான் வா.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்திருக்கும் ஆவணத்தில் உள்ள சொத்தைதான் கிரயம் பெற்றுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி சொத்தினை நான் கெங்கம்மாள், இளங்கோவன், ராதா, ரமணன் ஆகியோரிடம் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மேற்படி நால்வரும் என்ன சமுதாயத்தை சேர்ந்தவர்கள் என்றால் நாயுடு சமுதாயத்தை சேர்ந்தவர்கள் ஆவார்கள். நான் தாக்கல் செய்திருக்கும் வழக்கிற்கு பிரதிவாதிகளின் பதிலுரையை என் வழக்கறிஞர் மூலம் தெரிந்துகொண்டேனா என்றால் இல்லை. நான் கிரயம் பெற்றுள்ள நிலம் பஞ்சமர் நிலம் என்பதனால் நான் கிரயம் பெறக்கூடாது என்று சொன்னால் சரியல்ல. நான் கிரயம் பெற்ற சொத்து பட்டா நிலம் ஆகும். கிரயம் பெறுவதற்கு முன்பு நான் வில்லங்கமோ அடங்கள் போட்டு பார்த்தேனா என்றால் இல்லை. எனக்கு படிக்க தெரியாது. எனது மகனை கேட்டால்தான் தெரியும். மேற்படி சொத்தினை என்னுடைய கணவரும் என்னுடைய மகனும் சேர்ந்துதான் எனக்கு கிரயம் பெற்றார்கள்.

2. வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படட்டுள்ள ஆவ ணமானது கிரயம் கொடுத்த நபர்களுக்கே உரிமையானது என்றும் அதனால் அது செல்லது என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் வருவாய்த்துறையில் மனு அளிக்கப்பட்டு அதன் பேரில் என்னை விசாரித்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். பிரதிவாதிகள் எதற்காக மனு கொடுத்தார்கள் என்றால் அவர்கள் சொத்து என்பதற்காக அவர்கள் மனு கொடுத்தார்கள். நான் சொல்வது பொய் என்றும் பிரதிவாதிகள் மேற்படி நிலமானது பஞ்சமர் நிலம் என்பதாலும் அவர்களுக்கு சொந்தமானது என்பதனாலும் நான் அதனை ஆக்கிரமித்துள்ளேன் என்பதற்காக மனு கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. பஞ்சமர் நிலம் நடவடிக்கையை தடுப்பதற்காக இந்த வழக்கு நிலுவையில் உள்ளதனை காண்பிப்பதற்காக இந்த வழக்கினை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் வழக்கு தாக்கல் செய்து அது நிலுவையில் உள்ள விவரத்தினை தாசில்தாருக்கு அறிவிப்பு ஒன்றை கொடுத்துள்ளேனா என்றால் எனது மகன் கொடுத்திருப்பார்.

3. நான் கொடுத்த அறிவிப்பால் வட்டாட்சியர் வழக்கு நிலுவையில் உள்ளதை காரணம் காட்டி பிரதிவாதிகளின் மனுவில் எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரியல்ல. அதனால் என்னுடைய வழக்கானது சட்டத்திற்கு முரணானது என்றும் அதனால் நான் கேட்கும் பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதேபோல் வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள

ஆவணம் சட்டத்திற்கு முரணான ஆவணம் என்றால் சரியல்ல. எனவே வழக்கினை தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்று சொன்னால் சரியல்ல.

**இத்துடன் குறுக்கு விசாரணை முடிவடைகிறது.**

**மறுவிசாரணை**

இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி அதை படித்து பார்த்து/படிக்கக் கேட்டு சரியென்று ஒப்புக்கொண்டு கையெழுத்து செய்தார்.

K NALEENI

Digitally signed by K NALEENI
Date: 2026.03.05 17:29:57 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

செய்யாறு